(ஆ) "காகிதமில்லா சட்டமன்றம்" என்னும் இலக்கினை எய்தும் வகையில் வெட்டுத் தீர்மானங்கள் மென்பொருள் வடிவில் உறுப்பினர்களுக்கும், துறைகளுக்கும் மின்னஞ்சல்மூலம் அனுப்பிவைக்கப்பெறுதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *பேரவைக்கு ஓர் அறிவிப்பு. "காகிதமில்லா சட்டமன்றம்" எனும் நிலையினை உருவாக்க எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கையின் தொடர்ச்சியாக 2020–2021 ஆம் ஆண்டிற்கான மானியக் கோரிக்கைகளின்மீது உறுப்பினர்களால் அளிக்கப்பட்டு, அனுமதிக்கப்பட்ட வெட்டுத் தீர்மானங்கள் தொகுத்து தயார் செய்யப்பட்டு, அவற்றின் ஐந்து பிரதிகள் மானியக் கோரிக்கைகள் எடுக்கப்பெறும் நாளன்று மாண்புமிகு உறுப்பினர்களின் பார்வைக்காக சட்டமன்றப் பேரவை நூலகத்தில் வைக்கப்படும். அவற்றின் மென்பொருள் நகல் மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், சம்பந்தப்பட்ட துறைகளுக்கும் முன்னதாகவே மின்னஞ்சல்மூலம் அனுப்பிவைக்கப்படும். அச்சிட்ட பிரதிகள் மாண்புமிகு உறுப்பினர்களுக்கு இனி அனுப்பப்பெறாது என்பதைப் பேரவையின் அனுமதியுடன் தெரிவித்துக்கொள்கிறேன்.* (குறுக்கீடுகள்)

2. தகவல் கோரல்—*தொடர்ச்சி*

(ஆ) உறுப்பினர்கள் கொடுத்துள்ள முன்னறிவிப்புகள்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *அவையெல்லாம் துறைகளுக்குச் சென்றிருக்கின்றன. பதில் வந்தால் பார்க்கலாம். என் ஆய்வில் உள்ளது, உட்காருங்கள்* (குறுக்கீடுகள்) *உட்காருங்கள்,* (குறுக்கீடுகள்) *உட்காருங்கள், நான்* Agenda*–விற்குள் சென்றுவிட்டேன். மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜே.ஜி. பிரின்ஸ், உட்காருங்கள், நீங்கள் உட்காரவில்லையென்றால், பிறகு நான் வேறுவிதமாக நடவடிக்கை எடுக்க வேண்டியிருக்கும். உட்காருங்கள், மாண்புமிகு வனத் துறை அமைச்சர் அவர்கள்* Demand move *செய்கிறார்கள், உட்காருங்கள். உங்களுக்கு முக்கியமான பிரச்சினைகள் இருந்தால், எனக்கு இந்த அவையை நடத்த வேண்டியது முக்கியமான பிரச்சினை. ஒரு நாளைக்கு ஒவ்வொன்றாகத்தான், ஒவ்வொரு பிரச்சினையாகத்தான் எடுத்துக்கொள்ள முடியும். அனைத்து உறுப்பினர்களின் பிரச்சினைகளையும் என்னால் எடுத்துக்கொள்ள முடியாது. உட்காருங்கள்.*